கூடுதல் மாவட்ட நீதிமன்றம், (விரைவு நீதிமன்றம்),தேனி

MCOP.No.147/2021

நாள் : 25.08.2022

ம.சா.1.பாண்டி முருகேஸ்வரி , மீண்டும் வரவழைக்கப்பட்டார் . சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.

**<u>4 வது எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணை</u>**

என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் விபரங்கள் எனக்கு தெரியும். என் கணவர் க .விலக்கு மருத்துவமனையில் இருந்தபோது நானும் , என் குடும்பத்தாரும் அவரை விசாரித்து விபத்து பற்றிய விபரங்களை தெரிந்துகொண்டோம் . என் கணவர் என்னிடம் அரசு பேருந்து ஓட்டுநரின் தவறால் தனக்கு காயம் ஏற்பட்டதாக சொன்னார். முதல் தகவல் அறிக்கை , குற்ற அறிக்கை அரசு பேருந்து ஓட்டுநர் மீது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது . பேருந்தில் பயணம் செய்தவர்களை விசாரித்தேன் . பயணிகள் அரசு பேருந்து ஓட்டுநரின் தவறால் விபத்து நடந்ததாக சொன்னார்கள் . பேருந்துக்கு பின்னால் வந்த லாரி ஓட்டுநரின் தவறால் விபத்து நடந்ததாக எனக்கு யாரும் சொல்லவில்லை . 3 முதல் 5 எதிர்மனுதாரர்களை நான் வழக்கில் பெயரளவு எதிர்மனுதாரர்களாக சேர்த்திருக்கிறேன். எனவே 4ம் எதிர்மனுதாரர் மீதான மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**<u>முதல் எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணை</u>**

என் கணவர் இறந்தபோது அவரது வயது 33 ஆகும். என் கணவர் 10ம் வகுப்பு படித்தவர். என் கணவரின் வயதை காட்ட வயதுச்சான்று தாக்கல் செய்யவில்லை . என் கணவர் ஓட்டுநராக வேலை செய்து வந்தார் . என் கணவர் 10 ஆண்டுகளாக TN52A7758 வண்டியில் ஓட்டுநராக இருந்தார் . என் கணவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1000/– ஊதியமாகும். என் கணவர் சம்பளச்சான்றை தாக்கல் செய்யவில்லை . நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை . எனக்கு நேரடியாக விபத்தை பற்றி தெரியாது . என் கணவரை நான் உயிருடன் க .விலக்கு மருத்துவமனையில் பார்த்தேன் . என் கணவர் நான் பார்த்தபோது பேசும் நிலையில் இருந்தார் . என் கணவர் மயங்கிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் தவறு . என் கணவர் காவல் துறையில் புகார் கொடுக்கவில்லை. என் கணவர் காவல் துறையினருக்கு வாக்குமூலம் கொடுக்கவில்லை. விபத்து என் கணவரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால்

தவறு. என் கணவர் ஓட்டிச்சென்ற லாரியில் பாரம் அளவுக்கு அதிகமாக ஏற்றப்பட்டிருந்தது என்றால் தவறு . அதிகமான பாரம் ஏற்றப்பட்டிருந்ததால் என் கணவரால் வண்டியை கட்டுப்பாட்டுடன் இயக்க முடியவில்லை என்றால் தவறு . என் கணவர் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாததால் விபத்து ஏற்பட்டது என்றால் தவறு . நான் பயணிகளிடமும் , என் கணவரிடமும் விசாரித்து விபத்து பற்றி தெரிந்து கொண்டதாக பொய் சொல்கிறேன் என்றால் தவறு . எனது மாமனார் விபத்திற்கு புகார் கொடுத்தார். விபத்திற்கு முதல் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் காரணம் இல்லை என்றால் தவறு. எனவே முதல் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் தவறு . மனுவை முதல் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் தவறு.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் படியத்தேவர் மகன் காராமணி என்பவரை எங்கு சந்தித்தேன் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்வில்லை. புகாரில் காராமணியை சந்தித்தது பற்றிய தகவல் சொல்லப்பட்டிருக்கிறதா என்று தெரியாது. காராமணியின் பயணச்சீட்டை நான் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் காராமணியின் பெயரை குறிப்பிடவில்லை. காராமணி என் உறவினர் என்றால் தவறு . நாங்கள் காராமணியை எங்களது ஆதரவாக பயன்படுத்திக்கொண்டோம் என்றால் தவறு. என் கணவர் லாரியை கவனமில்லாமலும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி விபத்து ஏற்படுத்திவிட்டார் என்றால் தவறு. அரசு பேருந்து ஓட்டுநரின் தவறால் விபத்து ஏற்படவில்லை என்றால் தவறு . காப்பீடு பெறுவதற்காக அரசு பேருந்து ஓட்டுநரின் மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் தவறு . 2ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்கவேண்டிய கடமை இல்லை என்றால் தவறு.

<u>ம.வி.</u> – இல்லை.

| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டது. அவரால் சரி என் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது |
| --- |
| கூடுதல் மாவட்ட விரைவு நீதிபதி<br>தேனி |